18.11.2025

O.S.No. 51/2021

PW1– சுப்பிரமணியன் – த/பெ. மேகலிங்கம்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 18.11.2025

On perusal of records it reveals that one of the document which has been filed along with the plaint and also mentioned the proof affidavit was not marked due to inadvertence the act of non marking is neither willful nor wanton therefore this court suo moto reopen the PW1 chief and marks the following documents.

வாதியின் வங்கி கணக்கு ஸ்டேட்மெண்ட் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

குறுக்கு விசாரணை : ( பிரதிவாதி தரப்பில்)

1. தபசில் கடை பிரதிவாதி கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். நான் ஜவுளி வியாபாரம் தொழில் கிடையாது என்றால் சரிதான். நான் வீட்டு உபயோகப்பொருட்கள் வியாபாரம் செய்துவருகிறேன், பழையஇரும்பு கடைநடத்திவருகிறேன் என்றால் சரிதான். அதற்கு மட்டும் தான் உரிமம் உள்ளது என்றால் பிளாஸ்டிக் வியாபாரத்திற்கும் உரிமம் உள்ளது.

2. நான் எந்த ஆண்டிலிருந்து வருமான வரி செலுத்திவருகிறேன் என்றால் 15 ஆண்டுகளுக்கு முன்பிருந்து செலுத்திவருகிறேன். பிரதிவாதி கோவிலின் தபசில் வாடகைதாரராக செல்வராஜ் தான் உள்ளார் என்றால் சரிதான். மேற்படி செல்வராஜ் அரசு டெக்ஸ் என்ற பெயரில் ஜவுளி கடை வைத்திருந்தார் என்றால் சரிதான். அவர் பாவூர்சத்திரத்தில் இதே பெயரில் கடை நடத்திவந்தார் என்றால் சரிதான். அதுமட்டுமில்லாமல் அவர் ரியல்

எஸ்டேட் செய்துவந்தார் என்றால் எனக்கு தெரியாது. நானும், மேற்படி செல்வராஜ் என்பவரும் 1997 லிருந்து கூட்டாளிகளாக உள்ளோம். எங்கள் Partnership பெயர் என்னவென்றால் அரசு டெக்ஸ். மேற்படி பதிவு கூட்டாண்மையின் சான்றை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி நிறுவனத்தின் வரவு, செலவு கணக்குகளையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதைபோல் எனது வருமான வரி கணக்கையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3. தபசில் இடத்தில் செல்வராஜ் கடை நடத்தி அது நஷ்டமானதால் அதை நடத்த என்னிடம் கொடுத்தார் என்றால்அவரால் பார்க்கமுடியவில்லை என்று என்னிடம் கொடுத்தார். நான் பிராதுதபசில் கடைக்கு உள்வாடகைதாராக உள்ளேன் என்றால் சரியல்ல, நானும், செல்வராஜ்ம் கூட்டாளிகளாக உள்ளதால் நடத்திவருகிறேன். எனது வருமானவரி கணக்கையும், எங்கள் கூட்டாண்மையின் வரவு செலவு கணக்குகளையும் வரவழைப்பு செய்வதற்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான்.

4. கடையை நான் நடத்திவருவதற்கு செல்வராஜ்க்கு எவ்வளவு தொகை கொடுத்தேன் என்றால் செல்வராஜிடம் எனது பணம் உள்ளது. கூட்டாண்மையை ஏற்படுத்த நான் ரூ.5 லட்சம் கொடுத்துள்ளேன். 1999 ம் ஆண்டு கூட்டாண்மை ஏற்படுத்தும் சமயத்தில் நான் கொடுத்த ரூ.5 லட்சம் எனது வருமானவரி கணக்கில் துலங்கும் என்றால் சரிதான். செல்வராஜிடம் இருந்து கடையை நடத்துவதற்கு பிரதிவாதி கோவிலிடம் இருந்து முன்அனுமதி வாங்கினேனா என்றால் எழுத்துப்பூர்வமாக வாங்கவில்லை.

5. நான் கோவிலுக்கு எத்தனை ஆண்டு வாடகை தரவில்லை என்றால் நான் போன மாதம் வரை வாடகை செலுத்தியுள்ளேன். அதற்கான கணக்குகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். கோவிலின் வாடகைதாரர் பெயர்மாற்றம் செய்வதற்கு என்ன நடைமுறை என்று எனக்கு தெரியும். நான் முறையான நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. எந்த ஆண்டு செல்வராஜ் கடையை வாடகைக்கு எடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. அவர் எவ்வளவு தொகை பாக்கிவைத்திருந்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எங்கள் கூட்டாண்மை நிறுவனத்தின் காசோலையில் கையொப்பம் செய்யும் அதிகாரம் யாருக்கு வழங்கப்பட்டது என இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒம்/—K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.